
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026

கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher
**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members
**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*

## EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**
Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
திரு ப. ஜெயகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
முனைவர் பிரியாகிருஷ்ணன்
**+917299587879**
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# சேரன் கவிதைகளில் எதுகையும் மோனையும்

## ALLITERATION AND ASSONANCE OF CHERAN S POETRY

**த.அமுல்பிரியா** (Ref.No. **11382/Ph.D.K8/Tamil/Full Time/October 2017/Confirm./Dt: 25.01.2021**)
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை உயராய்வு மையம் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த),தஞ்சாவூர்-613 007 (பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)
T. AMULPRIYA (Ref.No. **11382/Ph.D.K8/Tamil/Full Time/October 2017/Confirm./Dt: 25.01.2021**), Research Scholar, Department of Tamil, Kunthavai Naacchiyaar Government Arts College for Women (Autonomous), Thanjavur-613 007, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)
ORCiD: https://orcid.org/0009-0007-4825-3997

**முனைவர் பொ.திராவிடமணி,** நெறியாளர். இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை உயராய்வு மையம். குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த) தஞ்சாவூர்-613 007
(பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)
**Dr. P. THIRAVIDAMANI, Research Advisor** — Associate Professor, Department of Tamil, Kunthavai Naacchiyaar Government Arts College for Women (Autonomous), Thanjavur-613 007, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)
ORCiD: https://orcid.org/0009-0003-7374-5732

### Abstract

*Poetry is a powerful art form that stimulates the thinking power of man and engages him in introspection. New poetry is a beautiful form that appears in the imagination of the poet. A genre of literature that is free from grammatical limitations and crawls with unrestrained freedom to paint all the happenings in society in words and capture the hearts of art lovers. Aristotle created Poetics considering only the medium of poetry. But the practice of creating literature in prose did not exist then. That is why autobiographical poetry, dramatic poetry, and epic poetry speak about the nature of poetry. Due to the abundance of prose works in this period, poetics became a principle of literary discourse. Literary theory can be renamed as poetics. Poetics is based on language forms and language elements. Among the femoral components best considered in gait techniques is the use of hamstrings and hamstrings. Through this article you can see the features of Cheran poetry.*

**கருவிச் சொற்கள் (Keywords): Alliteration**, Paired **Alliteration**, Alternating Alliteration, One-interval Alliteration, Clustered Alliteration, **Assonance**, Line-initial **Assonance**, Parallel **Assonance**, Alternating **Assonance**, One-internal **Assonance**, Clustered **Assonance**, Earlier Position **Assonance**, Lower-position **Assonance**, Complete Assonance.

### ஆய்வுச்சுருக்கம்

மனிதனது சிந்தனை ஆற்றலைத் தூண்டிவிடவும், தன்னைப் பற்றிய உள்முகச் சிந்தனையில் அவனை ஈடுபடுத்தவும் உதவும் ஆற்றல் மிக்க கலை வடிவமே கவிதை ஆகும். புதுக்கவிதை என்பது கவிஞனின் கற்பனைச் சிதறலில் தோன்றும் அழகிய வடிவமாகும்.

இலக்கண வரம்புக்கு உட்படாது, கட்டுப்பாடற்ற சுதந்திரத்துடன் சமூகத்தில் நிலவும் அனைத்து நிகழ்வுகளையும் வார்த்தைகளாக வண்ணம் தீட்டி, கலை ரசிகர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்து, வலம் வரும் ஒரு இலக்கிய வகை. கவிதை என்னும் ஊடகத்தை மட்டுமே கருத்தில் கொண்டு அரிஸ்டாட்டில் கவிதையியலைப்

படைத்துள்ளார். ஆனால் உரைநடையில் இலக்கியம் படைக்கும் வழக்கம் அப்போது இல்லை. அதனால் தான் தன்னுணர்ச்சிக் கவிதை, நாடகக் கவிதை, இதிகாசக் கவிதைகளிலும், கவிதையின் இயல்புகளைப் பேசுவதாகவே அமைந்துள்ளது. இந்தக் காலத்தில் உரைநடை படைப்புகள் மிகுதியாகக் காணப்படுவதால் கவிதையியல் என்பது இலக்கியம் பேசும் ஒரு கொள்கையாக மாறிவிட்டது. இலக்கியக் கொள்கைக்கு மறுபெயர் என்றால் அது கவிதையியல் என்று கூறலாம். மொழி வடிவங்கள், மொழிக் கூறுகள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு விளங்குவது கவிதையியல். நடையின் உத்திகளில் சிறப்பாகக் கருதப்படுவன தொடைசார் கூறுகளுள் எதுகை, மோனை என்பனவற்றின் பயன்பாடாகும். சேரன் கவிதைகளில் எதுகையும் மோனையும் இடம்பெற்றுள்ளவற்றை இக்கட்டுரையின்வழி காணலாம்.

**கருவிச் சொற்கள் (Keywords):** எதுகை, இணை எதுகை, பொழிப்பு எதுகை, ஒரூஉ எதுகை, கூழை எதுகை, மோனை, அடிமோனை, இணை மோனை, பொழிப்பு மோனை, ஒரூஉ மோனை, கூழை மோனை, மேற்கதுவாய் மோனை, கீழ்க்கதுவாய் மோனை, முற்று மோனை.

**முன்னுரை**

கவிதை என்பது மிகவும் பழமையான ஓர் அமைப்பு ஆகும். இது மிகப்பழங்கால மக்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்றும், கவிதை எல்லா காலங்களிலும், எல்லா இன மக்களாலும், எல்லா நாடுகளிலும், போர் வீரர்கள், அரசியலறிஞர்கள், சட்ட வல்லுநர்கள், விவசாயிகள், எளிய பாமர மக்கள் ஆகியோரால் கவரப்பட்டு, எல்லாரிடமும் சிறந்த ஓர் இடத்தினைப் பெற்றுள்ளது.

மக்கள் கவிதையை விரும்புகிறார்கள், படிக்கிறார்கள், கேட்கிறார்கள், எடுத்துக் காட்டுகிறார்கள். மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாக இக்கவிதை அமைந்துள்ளது.

> **சுருங்கச் சொன்னால் கவிதை ஒரு பொழுது போக்கு செயல். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆங்கிலக் கவிஞரான டி.எஸ்.எலியட், 'கவிதை ஒரு மேலான மகிழ்ச்சியைத் தரும் பொழுதுபோக்கு' என்றார் (க.பூரணசந்திரன், கவிதையியல் வாசிப்பும் விமர்சனமும், ப.2).**

கவிதை ஒரு விளையாட்டுதான். இது மொழியினால், சொற்களினால் ஆடப்படும் விளையாட்டு என்று கூறப்படுகின்றது. மொழியின் வாயிலாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் ஒரு சிறந்த விளையாட்டு, வித்தியாசமான விளையாட்டு என்றால் அது கவிதை,

> **நாம் நம்மைக் கண்டுகொள்ளும், அதாவது உணர்ந்து கொள்ளும் சூழ்நிலைகளை வார்த்தைகளால் சொல்ல முற்படும்போது அது கவிதை ஆகிறது. இலக்கியம் எல்லாம் இப்படித்தான் என்றாலும், கவிதை சந்தம், ஒலிநயம் சார்ந்து இயங்குகிறது (க.பூரணசந்திரன், கவிதையியல் வாசிப்பும் விமர்சனமும், ப.3).**

**கவிதையியல்**

கவிதையியல் என்பது வாசிப்புச் செயல்பாடுகளையும், கவிதை மரபுகளையும் விளக்கங்களை விளக்குவதே கவிதையியல் ஆகும். மேற்கத்திய கவிதையியல் சொல்லணியியல் அல்லது பேச்சணியியலோடு (ரிடாரிக் - சொல் அலங்காரங்கள், மேடைப் பேச்சு அலங்காரங்கள் பற்றிய துறை) நெருங்கிய தொடர்புடையது.

கவிஞனின் திறன் நிரம்பிய மொழியானது, வாசகனை தூண்டி இயக்கக் கூடிய தன்மைக் கொண்டது. இது பழங்காலத்திலிருந்து எப்படி திகழ்கின்றது என்பதை ஆய்வு செய்யும் ஒரு துறையாக விளங்குவது கவிதை இயல், கவிதையின் ஆற்றல் வாய்ந்த சொல்லாடலை உருவாக்கப் பயன்படும் மொழி சிந்தனை ஆகியவற்றிற்கான தொழில்நுட்பங்களான 'மூல வளங்கள்' அமைகின்றது.

கவிதையியலைச் சொல்லணியிலிருந்து பிரித்தார் அரிஸ்டாட்டில், இரசிகரைத் தூண்டி இணங்கச் செய்வதற்கான கலை என்று சொல்லணிணையும், போலி செய்தல் அல்லது பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான கலை என்னும் கவிதையியலை வேறுபடுத்தினார்.

> ***சொல்லாட்சி என்ற தலைப்பின் கீழ் உரையாடல், பேச்சு ஆகியவற்றில் மொழியைக் கையாளும் போது மேற்கொள்ள வேண்டிய சில விதிகளைப் பற்றிச் சிந்திக்கலாம். காட்டாக, ஆணையிடுதலுக்கும் வேண்டிக் கொள்ளுதலும், வெறும் செய்தி கூறலும் அச்சுறுத்தலும், வினாவும் விடையும் என்னின்னவற்றை வெளிப்படுத்தும்போது மேற்கொள்ளும் வேறுபட்ட சொல்லாட்சியைப் பற்றி ஆராயலாம் (அ.அ.மணவாளன், அரிஸ்டாடிலின் கவிதை இயல், ப.95).***

**மொழி**

> ***இலக்கியத்திற்கு உயிர்நாடியாக அமைவது மொழிநடை, நடை என்றால் இயக்கம் என்று பொருள். இயக்கத்தில் சொற்களின் மூலம் அமைக்கப்படும் திறனை நடை என்று கூறுவர். கருத்துக்களைக் கூறும் போது சொற்கள் முறைப்படி அமைய வேண்டும். அப்பொழுதுதான் நடைசிறக்கும் என்பதை உரிய சொற்கள் உரிய இடங்களில் பொருந்தி நடப்பதே நடை (இ.சுந்தரமூர்த்தி, நடையியல் அறிமுகம், ப.77)***

என்று நடையின் சிறப்பினை சுந்தரமூர்த்தி சுட்டுகிறார்.

> ***மொழி என்பது மக்கள் தம்முணர்வோடு பிறப்பிக்கும் ஒலிகளாகிய குறியீடுகள் மூலம் தங்கள் எண்ணங்களையும் எழுச்சிகளையும் வெளியிடுவதற்கு உதவுகிற ஓர் அமைப்பேயாகும் (கலைக்களஞ்சியம், தொகுதி 8, ப.544)***

என்று கு.பரமசிவம் கூறுகிறார்.

> ***பேச்சு ஒலிகளால் அமைந்த சொற்களின் அடிப்படையான கருத்து வெளிப்பாடே மொழியாகும். மொழியில் எழுத்துக்கள் பல சேர்ந்து சொற்களாகவும், சொற்கள் பல சேர்ந்து வாக்கியங்களாகவும் ஆகின்றன (பிரிட்டானிகா கலைக்களஞ்சியம், தொகுதி 10, ப.642)***

என்று பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் குறிப்பிட்டுள்ளது.

மொழியின் செயல்பாட்டை விளக்க வந்த கருணாகரன்,

> ***மொழி ஒரு சமுதாயத்தின் அன்றாட இயக்கத்திற்கான (day to day interaction) அடிப்படைச் செய்திப் பரிமாற்ற இயந்திரம் (கி.கருணாகரன், மொழி வளர்ச்சி, ப.1)***

என் குறிப்பிடுகிறார்.

**நடை விளக்கம்**

இன்றைய இலக்கிய உலகில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஒரு சொல் என்றால் அது 'நடை' என்பதாகும். இச்சொல்லைப் பயன்படுத்தாத திறனாய்வாளர்களே இருக்க முடியாது. ஒரு படைப்பின் தன்மையை அளவிடும் பல்வேறு உத்திகளுள் நடை ஆய்வும் ஒன்றாகும். ஒருவர் பேசுவதைப் போல மற்றவரால் பேச முடியாது. அதைப் போல ஒருவரது எழுத்தைப் போல் மற்றவரின் எழுத்தும் இருப்பதில்லை. இலக்கியப் படைப்பாளர்களை இனங்கண்டு கொள்வதற்கு மொழிநடை பெரிதும் துணை நிற்கிறது. நடைக்கேற்றவாறு படைப்புகளின் தன்மைகளும் மாறுபடுகின்றன. நடையியலின் இன்றியமையாமை இன்று இலக்கியத் திறனாய்வுலகில் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் நடையினை இனங்காண்பதற்கான தெளிவான நெறிமுறைகள் வரையறுக்கப்படவில்லை.

> ***தலைசிறந்த ஓர் இலக்கியத்தின் பகுதிகளைப் படித்தவுடன் அவற்றின் நடையைக் கொண்டே அவ்விலக்கிய ஆசிரியர் யார் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். ஒவ்வோர் இலக்கிய ஆசிரியரின் நடையும் அவரவர் தன்மைக்கு ஏற்ப அமைகிறது. படைப்பாளி பயன்படுத்தும் சொற்கள், சொற்றொடர்களை மாற்றியமைக்கும் திறன், வாக்கி அமைப்பு, தனி ஒலிநயம் இவை போன்றவை எழுத்தாளரின் தனித்தன்மையை ஒட்டியவையாகும். எனவே நடையாவது அடிப்படையில் படைப்பாளரின் தனிப்பண்பைக் குறிப்பது ஆகும் (தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், பக்.93-94).***

> ***மனதில் எழும் உணர்வுகளை உரிய சொற்களால் வடித்துக் கொடுக்கும் கலைத்திறனையே நடை என்று கூறலாம் (வ.சுப.மாணிக்கம், வள்ளுவம், ப.262)***

*என நடையின் சிறப்பைக் கூறுகிறார் வ.சுப.மாணிக்கம். மேலும்,*

> ***நடையழகு இல்லாத இலக்கியம் நிற வன்மை இல்லாத சோலையையும் மெய்பாடில்லா நடிகையையும், வெள்ளாடை உடுத்திய பெண்மையையும் ஒக்கும் (இரா.வீரா, கலிங்கத்துப் பரணியின் சொற்பொருண்மைச் சிறப்புகளும் நடையியல் கூறுகளும், ப.82)***

*என்று குறிப்பிட்டுள்ளார்.*

> ***நடை என்பது கவிஞன் தனித்தன்மை கவிஞன் உணர்த்தும் உத்தி இலக்கிய உச்சநயம் என்பதேயாகும் (இரா.வீரா, கலிங்கத்துப் பரணியின் சொற்பொருண்மைச் சிறப்புகளும் நடையியல் கூறுகளும், ப.82)***

*என்று கருத்துரைக்கிறார் மர்ரே.*

*இவ்வாறாக நடைக்கான விளக்கங்களையும் பல்வேறு அறிஞர்கள் பலவாறாகக் கூறியுள்ளனர். இவ்வகையில் நடைசார் கூறுகள் இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.*

**தொடை**

*எழுத்துக்களாலாகும் சீர்கள் தளையுற அமைந்து, அடிகளாய்த் தொடர்ந்த, ஓசை நயமும் பொருட்சுவையும் கொண்டு நடப்பது செய்யுள், செய்யுளில் அடிகளும், அடிகளிலுள்ள சீர்களும் ஒன்றையொன்று தொடுத்துச் செல்லும் அமைப்பினைத் தொடை என்பர். செய்யுளின் ஓசைக்கும் இனிமைக்கும் இத்தொடை இன்றியமையா உறுப்பாகும்.*

1. *மோனைத்தொடை*
2. *எதுகைத் தொடை*
3. *முரண் தொடை*
4. *இயைபுத் தொடை*
5. *அளபெடைத் தொகை*

*என ஐவகைப்படும். இவற்றுள் இயைபு ஒழிந்து மற்ற நான்கு தொடைகளும் அடியின் முதல் சீரின் கண்ணும், இயைபு இறுதிச்சீரின் கண்ணும் வருவதற்குரியன. இறுவாய் ஒத்தல் 'இயைபெனப்படுமே' (இளம்பூரணர் உரை, தொல். பொருள். களவு., ப.375) என்பது சூத்திரம் ஆங்கிலத்தில் வழங்கும் (Rhyme) என்பது இத்தொடையும் ஒன்றே எனலாம். இத்தொடை பெரும்பாலும் இசைப்பாட்டிற்குரியதாகக் கருதப்படுகிறது.*

*இத்தொடைகள் அடி முதல் சீரின்கண் வருவதோடு, அடியிலுள்ள சீர்களிலும் பொருந்தி வரலாம். ஐவகை தொடைகளும், அடி, இணை, பொழிப்பு, ஒடுஉ, கூகை, மேற்கதுவாய், கீழ்கதுவாய், முற்று என்ற எண் வகை விகற்பங்களோடு சேர்ந்து நாற்பது வகையில் அமையலாம்.*

இவையன்றி அந்தாதித்தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை, என்ற பிற தொடைகளும் இருக்கின்றன. இவற்றுள், மோனை, எதுகை, என்னும் இவ்விரு தொடைகளும் செய்யுள் அமைப்பில் மிக முக்கியமான உறுப்புகளாய்க் கருதப்படுகிறது.

**தொடர்சார் கூறுகள்**

நடையின் உத்திகளில் சிறப்பானதாகக் கருதப்படுவது தொடைசார் கூறுகளான எதுகை, மோனை என்பனவற்றின் பயன்பாடாகும். அவற்றைத் தொல்காப்பியர்,

***மோனை எதுகை முரணே இயைபென***
***நானெறி மரபின் தொடை வகை என்ப (தொல். செய்யுளியல், ப.83)***
***அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும் (தொல். செய்யுளியல், ப.85)***

தொடைசார் கூறுகளாகத் தொல்காப்பியர் சுட்டியுள்ள எதுகையும் மோனையும் சேரன் கவிதைத் தொகுப்பில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைப் பின்வருமாறு காணலாம்.

**எதுகை**

அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருமாறு தொகுப்பது எதுகையாகும். இவ்வெதுகையைத் தொல்காப்பியர்,

***அடிதோறும் தலையெழுத்து ஒப்பது மோனை (தொல். செய்யுளியல், ப.88)***
***அஃதொழிற் தொன்றின் எதுகையாகும் (தொல். செய்யுளியல், ப.89)***

என்று சுட்டியுள்ளார். இவ்வெதுகையும் எட்டு உட்பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. இவ்வெதுகையின் பயன்பாடு கவிதைகளில் பயின்று வந்துள்ளதைச் சான்றுகள் வழி தெளியலாம்.

***அப்பாலும் அடிசார்ந்தார்***
***இப்பாலும் இருப்போர்கள் (சேரன், காடாற்று, ப.23)***
***வெள்ளித் துண்டுகள்***
***கொள்ளிக் கண்கள் (சேரன், காடாற்று, ப.50)***
***அனைவரும் ஒன்றாய்***
***பனைமர உச்சியும் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.45)***
***அன்று போனவன் அண்ணன்***
***இன்னும் இல்லை (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.45)***
***என் இதழ் நுனிகளிலும்***
***உன் முலை ஓரத்திலும் ஈரம் உலரும் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.113)***
***பெருவெளியில்***
***இரு பனைமரங்க (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.113)***

இதுபோன்று இன்னும் பல கவிதைகளில் எதுகை பயன்பட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது. கவிதைகளில் மோனையை விட எதுகை அதிகம் பயின்று வந்துள்ளதைக் காணமுடிகிறது.

**இணை எதுகை**

முதல் சீழின் இரண்டாம் சீரின் எழுத்தும் இரண்டாம் சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது இணை எதுகை எனப்படும்.

***கடல்மடியும் கடற்கரையும் துணை நிற்கும் எனச் (சேரன், காடாற்று, ப.99)***
***பறக்காத பறவையைக் கண்டேன் (சேரன், காடாற்று, ப.44)***
***பாடாதவனையும் ஆடாதவனையும் ஆண்மையற்றவன் என்று (சேரன், மீண்டும் கடலுக்கு, ப.71)***

**கொல்லாமல் கொல்வான் கொடியன் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.118)**
**மிஞ்சினால் கெஞ்சுவது ஆசை (சேரன், திணை மயக்கம், ப.31)**
**இருட்டும் திருட்டும் எனச் சேரா (சேரன், திணை மயக்கம், ப.19)**

மேற்கண்ட வரிகளில் இணை எதுகை பயன்பாட்டை அறியமுடிகின்றது.

**பொழிப்பு எதுகை**

முதல் சீரின் இரண்டாம் எழுத்தும், மூன்றாம் சீரின் இரண்டாம் எழுத்தும் ஒன்றி வருவது பொழிப்பு எதுகை.

**வெற்று நிலத்தில் காற்று எழும்புவது (சேரன், திணை மயக்கம், ப.7)**
**எனது கண்முன் எனது தோழர்கள் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.79)**
**சுற்றி அழச் சுற்றம் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.30)**
**கண்ணாடி அணிந்த பெண்களை முத்தமிடுவது பற்றி (சேரன், மீண்டும் கடலுக்கு, ப.30)**
**அவன் தலையைச் சுவரில் மோதினான் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.71)**

**ஒரூஉ எதுகை**

முதல் சீரின் இரண்டாம் எழுத்தும் நான்காம் சீரின் இரண்டாம் எழுத்தும் ஒன்றி வருவது ஒரூஉ எதுகை எனப்படும். இவ்வெதுகையின் பயன்பாட்டைப் பின்வரும் சான்றுகள் மூலம் அறியலாம்.

**கண்ணாடியின் முன் இன்னொரு கண்ணாடி (சேரன், மீண்டும் கடலுக்கு, ப.29)**
**மறுமொழியை எதிர் பார்க்காமல் குறுக்கே விழுந்து (சேரன், மீண்டும் கடலுக்கு, ப.40)**
**துப்பாக்கியால் பல் விளக்குவது எப்படி? (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.173)**
**இலையிலிருந்து காற்றில் இடையறாமல் அலையலையாக எழுந்து (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.167)**
**பரல் கற்களின்மீது சொற்களற்றுப் புரண்டு செல்லும் (சேரன், அஞர், ப.64)**
**அவனது கனவுகள் சாதாரணமானவை அவற்றுக்கும் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.163)**

இவ்வரிகளின் வாயிலாக ஒரூஉ எதுகை பயின்று வந்துள்ளன என அறியமுடிகின்றது.

**கூழை எதுகை**

முதல் மூன்று சீர்களின் இரண்டாம எழுத்து ஒன்றி வருவது கூழை எதுகை எனப்படும்.

**குருதியையே திருப்பித் தரும் வரலாற்றின் (சேரன், மீண்டும் கடலுக்கு, ப.23)**
**பாடலும் ஆடலும் கூடலும் என்று (சேரன், மீண்டும் கடலுக்கு, ப.70)**
**தாகமும் மோகமும் போகமும் அறிந்தேன் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.150)**

இவ்வரிகளில் மட்டுமே கூழை எதுகையின் பயன்பாட்டை அறியமுடிகிறது.

**மோனை**

அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும். இதனைத் தொல்காப்பியர்,

**அடிதோறும் தலையெழுத்து ஒப்பது மோனை (தொல். செய்யுளியல், ப.87)**

என்று கூறுகிறார். மோனையும், எதுகையும் எட்டு உட்பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளன. அவை 1. அடிமோனை, 2. இணை மோனை, 3. பொழிப்பு மோனை, 4. ஒரூஉ மோனை, 5. கூழை மோனை, 6. மேற்கதுவாய் மோனை, 7. கீழ்க்கதுவாய் மோனை, 8. முற்றுமோனை

என்பனவாகும். இம்மோனைகளை சேரன் தன் கவிதைத் தொகுப்பில் எவ்விதம் கையாண்டுள்ளார் என்பதைப் பின்வரும் சான்றுகள் வாயிலாகத் தெரியலாம்.

**அடிமோனை**

அடிமோனை என்பது முதல் அடியின் முதல் எழுத்தும் இரண்டாம் அடியின் முதல் எழுத்தும் ஒன்றி வருவது அடிமோனை எனப்படும்.

***எல்லாவற்றிலும் எதிரொலிக்கிறது முடிவற்ற ஈரத்துடன்***
***எனதும்உ னதும் இதழ்க் கலவி (சேரன், அஞர், ப.15)***
***கடல் பற்றிஆயிரம் கவிதை எழுதினேன் முடியவில்லை***
***கடலும் கவிதையும் (சேரன், காடாற்று, ப.35)***
***வெளியில் என்ன இருக்கிறது என்பதை அறியாமலே***
***வெளியில் தெரியாத அழகுகளை மோகித்தாய் (சேரன், திணை மயக்கம், ப.16)***
***வெண் முகில்கள் தவழாத***
***வெறும் நீல வானம் (சேரன், மீண்டும் கடலுக்கு, ப.83)***
***அன்றைக்குக் காற்றே இல்லை;***
***அலைகளும் எழாது செத்துப் போயிற்று கடல் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.83)***

இவ்வரிகளில் அடிமோனை பயின்று வந்துள்ளதைக் காணமுடிகிறது.

**இணை மோனை**

முதல் சீரின் முதல் எழுத்தும் இரண்டாம் சீரின் முதல் எழுத்தும் ஒன்றி வருவது இணை மோனை எனப்படும். எடுத்துக்காட்டாக,

***அந்தப்புறமாக அந்தப்புரம் இருக்கும் (சேரன், அஞர், ப.59)***
***இதுதான் இறுதி விருந்து என்பதை ஒருவரும் சொல்லவில்லை (சேரன், அஞர், ப.69)***
***பறக்காத பறவையைக் கண்டேன் (சேரன், காடாற்று, ப.47)***
***இப்பொழுது இருக்கிறது (சேரன், காடாற்று, ப.13)***
***காதல் காணாது மரித்த (சேரன், திணை மயக்கம், ப.74)***
***நினைவும் நினைவழிதலும் (சேரன், திணை மயக்கம், ப.77)***
***பனி படர்ந்து உலர்ந்த பாதையில் எப்போதும் போல (சேரன், மீண்டும் கடலுக்கு, ப.20)***
***மெல்ல மெல்ல கடலை மூடிக்கொண்டு வருகிறது (சேரன், மீண்டும் கடலுக்கு, ப.30)***
***இன்றைக்கு இரவு அன்று போலல்ல (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.30)***
***மஞ்சள் மலர்கள் கொடியென இறங்கும் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.53)***

மேற்கூறிய கவிதை வரிகளில் இணைமோனையின் பயன்பாட்டினை அறியமுடிகின்றது.

**பொழிப்பு மோனை**

முதல் சீரின் முதல் எழுத்தும் மூன்றாம் சீரின் முதல் எழுத்தும் ஒன்றி வருவது தொகுப்பது பொழிப்பு மோனை எனப்படும்.

***எங்களுக்கு முன்னே எங்கள் உணவுத்தட்டில் சிறுநீழ் (சேரன், அஞர், ப.30)***
***அவனுடைய முகம் அழியா நினைவாகத் தொங்குகிறது (சேரன், அஞர், ப.20)***
***அழிவுற்ற மொழியின் அகக்குரலின் தனிமையாகிறது (சேரன், திணைமயக்கம், ப.70)***
***எங்கள் கண்ணீர் எழுப்பிய நினைவு (சேரன், காடாற்று, ப.16)***
***மழையும் வெயிலும் மலையும் கடலும் (சேரன், காடாற்று, ப.41)***

**முத்தத்தில் கரைந்தது முகம் (சேரன், மீண்டும் கடலுக்குள், ப.32)**
**உயிர் பிழிந்து உருக்கிக் குரல் (சேரன், மீண்டும் கடலுக்குள், ப.43)**
**இறப்பு என்பது இன்னொரு உலகத்தின் (சேரன், மீண்டும் கடலுக்குள், ப.50)**
**இவற்றை மறுத்தல் இயலுமா எனக்கு (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.32)**
**குரல் வாங்கிக் குரல் கொடுக்கிற (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.59)**

இவை போன்ற பொழிப்பு மோனைகள் இக்கவிதைகளில் சேரனால் பொழிப்பு மோனை கையாளப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

**ஒரூஉ மோனை**

முதல் சீரின் முதல் எழுத்தும் நான்காம் சீரின் முதல் எழுத்தும் ஒன்றிவரத் தொடுப்பது ஒரூஉ மோனை எனப்படும்.

**அந்த ஒற்றைச் சதுர அடி நிலத்தின் (சேரன், அஞர், ப.40)**
**இணைக்க என எப்போதும் இருந்தன (சேரன், அஞர், ப.51)**
**எங்கு போகலாம் இன்று என்ற கேள்வியுடன் (சேரன், திணை மயக்கம், ப.59)**
**காதல் வேகத்தில் பாம்பெறியும் காமம் (சேரன், திணை மயக்கம், ப.61)**
**கடல் பற்றி ஆயிரம் கவிதை எழுதினேன் (சேரன், காடாற்று, ப.35)**
**அவர்கள் கொணர்ந்த வாழ்த்து அட்டையில் (சேரன், காடாற்று, ப.38)**
**குளிர்ந்து போன எரிமலைக் குழம்பிலிருந்து (சேரன், மீண்டும் கடலுக்குள், ப.67)**
**அவர்களை சூழ இருந்த அலைவீச்சில் (சேரன், மீண்டும் கடலுக்குள், ப.52)**
**மனதில் கிளை விரித்திருந்த மரங்களுக்கு (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.102)**
**நானோ இன்றைய நிகழ்வின் நாயகன் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.118)**

இவ்வரிகளில் ஒரூஉ மோனையின் பயன்பாட்டை அறியமுடிகின்றது.

**கூழை மோனை**

முதல் மூன்று சீர்களின் முதல் எழுத்தும் ஒன்றி வருவது கூழை மோனை எனப்படும்.

**நனையாமல் நளினமாக நடந்து போவது எப்படி (சேரன், அஞர், ப.19)**
**நினைவும் நினைவழிதலும் நினைவெழுதலும் (சேரன், திணை மயக்கம், ப.76)**
**அக்கக்கா அக்கக்கா . . . அடடட டடடா (சேரன், காடாற்று, ப.41)**
**கடல் கடல்தான் கவிதை கவிதைதான் (சேரன், காடாற்று, ப.35)**
**மனிதர்களுக்காக மட்டுமின்றி மரம் செடி (சேரன், மீண்டும் கடலுக்குள், ப.65)**
**சுத்திச் சுத்திச் சுப்பற்றை கொல்லைக்குள் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.122)**
**துகிலும் துயிலும் துறந்த கணங்கள் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.149)**

**மேற்கதுவாய் மோனை**

ஒரு அடியில் முதல் மூன்று, நான்காம் சீர்களின் முதல் எழுத்து ஒன்றி வருவது மேற்கதுவாய் மோனை எனப்படும். இம்மோனை ஒரு சில வரிகளில் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

**இறப்பே அழகானது இறப்பே இருப்பாயிற்று (சேரன், மீண்டும் கடலுக்கு, ப.50)**
**இந்த கதைகள் இப்போது இடம் பெயர்த்து விட்டன (சேரன், மீண்டும் கடலுக்கு, ப.59)**
**அம்மாவுக்கு முடியாதென்றால் அக்கா அல்லது சின்னவள் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.162)**
**மினுக்கிய உடையும் மிடுக்கும் மிளிர (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.164)**

மேற்கூறிய கவிதை வரிகளில் மேற்கதுவாய் மோனை பயின்று வந்துள்ளதைக் காணமுடிகின்றது.

**கீழ்க்கதுவாய் மோனை**

கவிதை வரிகளில் முதல், இரண்டு, நான்காம் சீரின் முதல் எழுத்துகள் ஒன்றி வருமாறு அமைவது கீழ்க்கதுவாய் மோனை எனப்படுகின்றது.

**துக்கம், துக்கம் காரணி, துக்க நிவாரணம் (சேரன், அஞர், ப.63)**

**இன்னும் இரவின் திரைகள் இறங்கா மலையில் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.29)**

**புல், புழு, பூச்சி, புளியம் இலைகள் (சேரன், நீ இப்போது இறங்கும் ஆறு, ப.77)**

**மயக்க மருந்தின்றி அறுக்கின்ற மருத்துவன் (சேரன், காடாற்று, ப.15)**

போன்றவை கீழ்க்கதுவாய் மோனையாக மேற்கண்ட கவிதை வரிகளில் இடம்பெற்றுள்ளன.

**முற்று மோனை**

முதல், இரண்டு, மூன்று, நான்கு ஆகிய சீர்களின் முதல் எழுத்துக்கள் ஒன்றிவருமாறு அமைவது முற்றுமோனை எனப்படும். இம்மோனை கவிதைகளில் மிகச்சிலவே இடம்பெற்றுள்ளன.

**கடல் கடல்தான் கவிதை கவிதைதான் (சேரன், காடாற்று, ப.35)**

**விட்டு விடு விட்டு விடு (சேரன், அஞர், ப.31)**

**முடிவுரை**

கவிதைப் பேசும் உண்மைகள் வாசகனிடம் முழுமையாகச் சென்று சேர வடிவமே, மொழிக்கூறுகளே துணை நிற்கும். சேரன் கவிதைகளில் கவிதையியல் பற்றிய செய்திகள் செறிவாக விளக்கப்பட்டுள்ளது. நடை விளக்கம், எதுகை, பொழிப்பு எதுகை, இணை எதுகை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு உள்ளன. சேரன் கவிதைகளில் அடிமோனை, இணைமோனை போன்ற மோனைகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு உள்ளன.

**துணைநூற் பட்டியல்**

இளம்பூரணர் (உ.ஆ.). *தொல்காப்பியம் — பொருளதிகாரம் (அகத்திணையியல்-புறத்திணையியல் (1953).* திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, மறுபதிப்பு - ஆகஸ்ட் 2004.

கருணாகரன், கி. *மொழி வளர்ச்சி.* மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1988.

*கலைக்களஞ்சியம், தொகுதி 8.* தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1998.

பரிமணம், அ.மா. (ப.ஆ.). *சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் — தொகுதி 6.* தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு - 2013.

சுந்தரமூர்த்தி, இ. *நடையியல் அறிமுகம்.* அன்பு நூலகம், சென்னை, 1970.

சேரன். *அஞர்.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2019.

சேரன். *காடாற்று.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2011.

சேரன். *திணை மயக்கம்.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2019.

சேரன். *நீ இப்போது இறங்கும் ஆறு.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2011.

சேரன். *மீண்டும் கடலுக்கு.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2005.

ஞானமூர்த்தி, தா.ஏ. *இலக்கியத் திறனாய்வியல்.* பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 2020.

இளம்பூரணர் (உ.ஆ.). *தொல்காப்பியம் — சொல்லதிகாரம் (1953).* திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, மறுபதிப்பு - ஆகஸ்ட் 2004.

*பிரிட்டானிகா கலைக்களஞ்சியம், தொகுதி 10.* தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை. 1889.

பூரணசந்திரன், க. *கவிதையியல் வாசிப்பும் விமர்சனமும்.* அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், 2013.

மணவாளன், அ.அ. *அரிஸ்டாடிலின் கவிதை இயல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,. சென்னை, 2001.

மாணிக்கம், வ.சுப. *வள்ளுவம்.* பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1953.

வீரா, இரா. *கலிங்கத்துப் பரணியின் சொற்பொருண்மைச் சிறப்புகளும் நடையியல் கூறுகளும்.*

***References***

Ilampooranar (Ed.). *Tholkappiyam — Porulathikaram (Agathinaiyiyal-Purathinaiyiyal (1953).* Thirunelveli, Thenninthiya Saiva Siddhantha Noorpathippu Kazhagam Limited, Chennai, Reprint — August 2004.

Karunakaran, K. *Mozhi Valarchi.* Manivasagar Pathippagam, Chidambaram, 1988.

*Kalaikalanjiyam, Volume 8.* Tamil Valarchi Kazhagam, Chennai, 1998.

Parimanam, A.M. (Ed.). *Sanga Ilakkiya Porulkalanjiyam — Volume 6.* Tamil University, Thanjavur, First Edition - 2013.

Sundaramoorthi, E. *Nadaiyiyal Arimugam.* Anbu Noolagam, Chennai, 1970.

Seran. *Aganar*. Kalachuvadu Pathippagam, Nagarcoil, 2019.

Seran. *Kaadatru.* Kalachuvadu Pathippagam, Nagarcoil, 2011.

Seran. *Thinai Mayakkam.* Kalachuvadu Pathippagam, Nagarcoil, 2019.

Seran. *Nee Ippothu Irangum Aaru.* Kalachuvadu Pathippagam, Nagarcoil, 2011.

Seran. *Meendum Kadalukku.* Kalachuvadu Pathippagam, Nagarcoil, 2005.

Gnanamoorthy, T.A. *Ilakkiya Thiranaiviyal.* Pari Nilayam, Chennai, First Edition, 2020.

Ilampooranar (Ed.). *Tholkappiyam — Sollathikaram (1953).* Thirunelveli, Thenninthiya Saiva Siddhantha Noorpathippu Kazhagam Limited, Chennai, Reprint — August 2004.

*Britannica Kalaikalanjiyam, Volume 10.* Tamil Valarchi Kazhagam, Chennai. 1889.

Pooranachandran, K. *Kavithaiyiyal Vasippum Vimarsanamum.* Adaiyalam Pathippagam, Puthanatham, 2013.

Manavalan, A.A. *Aristotilin Kavithai Iyal.* New Century Book House (P) Ltd., Chennai, 2001.

Manickam, V.Suba. *Valluvam.* Pari Nilayam, Chennai, Second Edition, 1953.

Veera, R. *Kalingathu Bharaniyin Sorporunmai Sirappukalum Nadaiyiyal Koorukalum.*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com